பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 12 | 28 - 07 - 94 | வியாழக்கிழமை | ஓசை 160

## வலிப்பு நோய்க்கு புதிய மருந்து பக்க விளைவற்றது என அறிவிப்பு

வலிப்பு நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கென புதிய மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஃபெல்பாமேட் எனும் இப்புதிய மருந்து, பதினைந்து வருட இடைவெளிக்குப் பின்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்போது உபயோகத்திலுள்ள மருந்துகளை விட அதிசக்தி வாய்ந்த இம் மருந்தினால் தேவையற்ற பின் விளைவுகள் உண்டாவது மிகக்குறைவாயிருக்கும் எனக் கூறப்படுகிறது. மூளையின் கலங்கள் ஒன்றுக்கொன்று (4ஆம் பக்கம் பார்க்க)

# குற்றப்புலனாய்வு தலைமையகத்தை உடன் இடம் மாற்றக்கோரிக்கை

## வெளிநாட்டு தூதரகம் விடுத்தது புலிகள் தாக்கலாமென அச்சம்

(கொழும்பு)

**கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுப் பணியக தலைமையகத்தை தற்போது இயங்கும் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுமாறு வெளிநாட்டுத் தூதரகம் ஒன்று அரசாங்கத்தை வற்புறுத்தி வருவதாகத் தெரியவந்துள்ளது. விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்ற செய்திகள் பரவியதைத் தொடர்ந்தே இவ்வாறு வற்புறுத்தப்படுவதாக கூறப்படுகிறது.**

கொழும்பு கிரகரிஸ் வீதியில் பல வருடங்களாக இயங்கி வரும் சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பணியகத் தலைமையகத்தையே உடனடியாக அங்கிருந்து அகற்றி வேறு இடத்திற்கு கொண்டு செல்லுமாறு அப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுத் தூதரகம் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இக் குற்றப்புலனாய்வுப் பணியகத் தலைமையகத்தை தாக்க திட்டமிட்டு வருகின்றனர் என்ற செய்தி பரவலாக பேசப்படுகின்றது. இதனால் சிலவேளை இத் தலைமையகம் தாக்குதலுக்கு உள்ளாகும் பட்சத்தில் அருகில் இருக்கும் தமது தூதுவராலயமும் பாதிப்பிற்குள்ளாகும் என்ற அச்சத்தினாலேயே தாம் இந்தக் கோரிக்கையை அரசிடம் விடுத்திருப்பதாக தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் அறிவுறுத்தல் கூட்டத்தில் சகல பரீட்சைப் பணிக் குழுவினரையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ். வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(பா)

## வட-கிழக்குப்பிரச்சினை உருவாக்கியது பிரபாகரன் அல்ல; ஐ. தே. கட்சியினரே

### தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சந்திரிகா உரை

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை உருவாக்கியவர் பிரபாகரன் அல்ல ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைமையுமே என பொது ஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட தலைமை வேட்பாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவியுமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு நாங்கள் எதிரானவர்கள். இந்த யுத்தம் நிறுத்தப்படவேண்டும். எனினும் நாங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. ஆயினும் இப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்.

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்குமாகாணசபையை விட கூடிய அதிகாரம் கொண்ட அதிகார அமைப்பு உருவாக்கப்படும். பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் நாம் வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவைப் பெறுவோம் என மேலும் அவர் கூறினார்.

## தாக்கநின்ற படையினர் மீது புலிகள் திடீர் தாக்குதல்

### இராணுவ அதிகாரி ஒருவர் பலி

மட்டுவில்நாடு என்னும் பகுதியில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில், இராணுவ அதிகாரியொருவர் பலியாகியதாக [illegible] த்தன.

புலிகள் மீது தாக்குதல் நடத்த சிறிலங்கா இராணுவத்தினர் தயார் நிலையில் இருந்ததாகவும் அவ்வேளையில் புலிகள் எதிர்பாராத வகையில் தாக்குதல் நடத்தி

## அகதிகளாக கொழும்பில் வசிக்கும் யாழ். மாவட்ட வாக்காளருக்கு

## பொ.ஐ.மு வெற்றிபெற்றால் சிறிமா அழைக்கப்படுவார்

# யாழ். மாவட்ட வாக்காளருக்கு வாக்களிப்பதில் அக்கறையில்லை

(கொழும்பு)

இடம்பெயர்ந்து அகதிகளாக உறவினர் வீடுகளில் வதியும் பல யாழ். மாவட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதில் ஆர்வம் காட்டவில்லை என தெரியவருகின்றது.

யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலில் பெரும்பகுதி சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது எனவும் தமிழ் வாக்காளர் இடாப்புகள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை எனவும் இதனால் யாழ். மாவட்டத்திலிருந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து வசித்தும், வாக்களிக்க விண்ணப்பித்தோர் தொகை மிகக் குறைவாயிருப்பதாகவும் தமிழ் குழு ஒன்று கூறியுள்ளது.

இடம் பெயர்ந்தவர்களில் 19000 பேர் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணிக்கு வாக்களிக்க பெருமாள் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்கள் பொதுத் தேர்தலின் போது வாக்களிக்க வேண்டும் என முன்னாள் வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கேட்டுள்ளார்.

இந்தியா இராஜஸ் தான் நகரிலிருந்து கொழும்பு பத்தி

( 4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு பிரச்சினையை ஐ. தே. க. சரியாக கையாளவில்லை

## கருத்துக் கணிப்பில் மக்களின் கருத்து இது

(கொழும்பு)

தற்போதைய அரசு பொருளாதார விடயத்திலும் வடக்கு-கிழக்கு பிரச்சினையை கையாளும் விதத்திலும் திருப்திகரமாக செயற்படவில்லை என கொழும்பில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்று கூறுகின்றது.

வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினையில் அரசு நடந்து கொள்ளும் விதம் எவ்வாறு உள்ளது என்ற கேள்விக்கு 57. 2 சதவீதமானோர் அரசு இன்னமும் நன்றாக செயற்படவேண்டும் எனக் கூறியுள்ளனர். 22. 8 வீதமானோர் அரசு இவ் விடயத்தில் திருப்திகரமாக செயற்பட்டுள்ளது எனக் கூறியுள்ளனர்.

பொருளாதார விடயத்தில் அரசின் நிலை குறித்து கேட்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வன்செயலில் காயமடைந்த மேலும் ஒருவர் மரணம்

(கொழும்பு)

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் நடைபெற்ற வன்செயல்களின் போது காயமடைந்து கொழும்பு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான எஸ். பி ஜயசிங்கா (வயது 45) என்னும் இவருடன் மேற்படி வன்செயலின் போது காயம் அடைந்து வைத்தியசாலையில் மரணம் அடைந்தவர்களின் தொகை ஆறாக அதிகரித்துள்ளது என தெரியவருகின்றது.

# நோயாளர் கவனத்திற்கு

இன்று கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் இன்று மதியம் 11. 00 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக் கொள்ளுகின்றார்.

# சிறிமா அழைக்கப்படுவார்

## ரணில் விக்கிரமசிங்கா தெரிவிப்பு

கூடுதலான ஆசனங்களைப் பெறும் கட்சித் தலைவருக்கே ஆட்சி அமைக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுவார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கொழும்பு வெச்சுறு பாயவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பிரதமர் இக்கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் இதன்படி பொதுஜன ஐக்கிய முன்னணி அதிக ஆசனங்கள் பெற்றால் சிறிமாவோ பண்டாரநாயக்காவே பிரதமர் பதவிக்கு ஜனாதிபதியினால் அழைக்கப்படுவார் என மேலும் தெரிவித்தார்.

# பொ.ஐ.மு. செயலருக்கு கொலைப்பயமுறுத்தல்

(கொழும்பு)

தனக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதால் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜயரத்ன ஜனாதிபதி விஜேதுங்காவை கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கடிதமொன்றை ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள ஜயரத்ன அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: கண்டி மாவட்ட வேட்பாளரான எனக்கு தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் கொலைப் பயமுறுத்தல்கள் அடிக்கடி விடுக்கப்பட்டு வருகின்றன.

என் வசமிருந்த ஆயுதத்தையும் பொலிசார் மீளப் பெற்றுவிட்டனர். அதைத் தருமாறு கேட்டபோதும் பொலிசார் இணங்கவில்லை இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளருக்கு ஜனாதிபதியின் பாதுகாவலர் உதவி, ஆயுதங்கள். வாகனங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளை நகரசபை உறுப்பினர் ஹுசைனும் கொலை செய்யப்படுவதற்கு முதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமக்கு வாக்களிக்குமாறு

# இ.தொ.கா.ஆதரவாளர் மீது பிரதமர் ரணில் அழுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களது விருப்பத் தெரிவு வாக்குகளை தமக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் இ. தொ. கா. தலைவர் அமைச்சர் சௌ. தொண்டமானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதற்கிணங்க தொண்டமான் விரைவில் ஒரு வெளிப்படையான அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இரு இ. தொ. காவினர் நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில், இராணுவ அதிகாரியொருவர் பலியாகியதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவி... இருந்ததாகவும் அவ்வேளையில் புலிகள் எதிர்பாராத வகையில் தாக்குதல் நடத்தியதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

# பண்டத்தரிப்பு மோதலில் ஐந்து படையினர் காயம்

## இருவர் அதிகாரிகள்

(கொழும்பு)

பண்டத்தரிப்பில் கடந்த 21-ம் திகதி படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியின்போது இரு அதிகாரிகள் உட்பட ஐந்து படையினர் காயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள், முன்னேற முயன்ற படையினர் மீது சிறுரக ஆயுதங்கள், மோட்டார் குண்டுகள் மூலம் தாக்குதல் மேற்கொண்டதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# 3 தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறை

## கிழக்கில் அதிரடிப்படை கொடுமை

(மட்டக்களப்பு)

கிழக்கில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

கடந்த 13-ம் திகதி மதியம் 12 மணியளவில் பெரிய போரதீவு அதிரடிப்படை முகாமைச் சேர்ந்தவர்களால் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவர், முகாமிற்குகொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டபின் முகாம் பொறுப்பதிகாரியினால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டார். பெரியபோரதீவைச் சேர்ந்த வசந்தி (வயது 19) என்னும் அப்பெண் வீட்டிற்கு சென்றவுடன் நஞ்சருந்தி தற்கொலை

(4ஆம் பக்கம் பார்க்க)

# வல்வைப் பகுதியில் றொக்கட் தாக்குதல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் நேற்று புக்காரா விமானம் ஒன்று மக்கள் குடியிருப்புக்களை நோக்கி றொக்கட்தாக்குதலை நடத்தியது இத் தாக்குதலின் போது ஒரே தடவையில் எட்டுக்கு மேற்பட்ட றொக்கட்டுகள் ஏவப்பட்டன அதேவேளை உலங்கு வானூர்தி ஒன்று அப்பகுதி மீது கலிபர் தாக்குதலை நடத்தியது.

காலை 6. 40 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலின் போது ஏவப்பட்ட றொக்கட்டுகள் கடற்கரைப் பகுதியிலும் கடலிலும் வீழ்ந்து வெடித்ததினால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன தரையில் பலகுழிகள் காண

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

ஐரோப்பா நாடு ஒன்றில் நிரந்தர வசிப்பிடம் கொண்ட விடுமுறையில் வருகை தந்துள்ள 34 வயதுடைய 8ல் நட்பு பெற்ற செவ்வாயில் 8 பாவம் உடையவருக்கு மணமகள் தேவை. 28 வயதுக்கு உட்பட்டவராகவும் இந்து சமயத்தை சேர்ந்தவராகவும் இருப்பது நன்று. தொடர்பு வி.இல-340 மே/பா ஈழநாதம் யாழ்ப்பாணம் (8914)

## தவறிவிட்டது

நேற்று அதிகாலை(27-7-94) டஸ் நிலையத்தில் மணிப்பேசுடன் ரொக்கப் பணம் (வெளிநாட்டு நாணயம்), தேசிய அடையாளஅட்டை தவறிவிட்டன இவற்றைக்கண்டெடுத்தவர்கள் 87,A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் வே·அரியநாயகம், வெளிநாட்டுக் கப்பல் 2-வது பொறியியலாளர்· (8950)

## டிப்ளோமா பயிற்சிநெறி

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியின் யாழ்ப்பாண கல்வி வலயம் இரண்டிற்குரிய ஆசிரியர்களுக்கான ஆரம்ப நிகழ்வும் பாட அமர்வுகளும் எதிர்வரும் சனிக்கிழமை காலை எட்டு மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

மேலும் மேற்படி பயிற்சி நெறியின் இந்து மகளிர் கல்லூரியில் பயிலும் இறுதிவருட மாணவர்களுக்கான சிறப்புக் கற்பித்தல் முறை பற்றிய பாட விதானங்கள் ஞாயிறு காலை ஒன்பது மணியளவில் இந்து மகளிர் கல்லூரியில் வழங்கப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னோடிப் பரீட்சை

(தொல்புரம்)

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கு தோற்ற விருக்கும் சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்குமான முன்னோடிப் பரீட்சைகள் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு தேர்ந்து எடுக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (41)


கல்வியங்காடு

**அருள்மிகு இலங்கை நாயகி மனோன்மணி அம்மாள் கோயில்**

**அம்பிகை அடியார்களே!**

இவ்வருடம் 29-07-94 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று தொடர்ந்து 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெற அம்பிகை அருள் பாலித்துள்ளார்.

**" மஹோற்சவகுரு: பிரம்மஸ்ரீ சதாயோகீஸ்வரக்குருக்கள் ",**

**விசேஷ உற்சவங்கள்**

**1-ம் நாள் 29-07-94** வெள்ளிக்கிழமை துவஜாரோகணம்
**8-ம் நாள் 5-08-94** வெள்ளிக்கிழமை இரவு பஞ்சத்திருவிழா
**9-ம் நாள் 6-08 94** சனிக்கிழமை இரவு குதிரைவாகனத்திருவிழா
**10-ம் நாள் 7 08-94** ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பறத்திருவிழா
**11-ம் நாள் 8.08·94** திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழா
**12-ம் நாள் 9.08.94** செவ்வாய்க்கிழமை காலை தீர்த்த உற்சவத் திருவிழா

அன்று மாலை திருவூஞ்சல் துவஜாவரோகணம் (கொடி இறக்கம்) சண்டேஸ்வரி உற்சவம் என்பன நடைபெறும்.

**அம்பிகை அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

இங்ஙனம்

பொ. கிருஷ்ணமூர்த்திசர்மா
ஆலய நிர்வாகம்

சு. பாலசுப்பிரமணியஐயர்
ஆலய உரிமையாளரும் ஆதீன கர்த்தாவும்

(சி-9995)


# கண்காட்சி

(பருத்தித்துறை)

இவ்வாண்டிற்கான ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்தமருத்துவம் பற்றிய கண்காட்சி கருத்தரங்குகள் நடாத்துவது பற்றிய கலந்துரையாடல் 30-7-94 யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா அறிவித்துள்ளார். (25)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

**தம்பித்துரை பரமேஸ்வரி**

மலர்வு: 05 - 06 - 1925
உதிர்வு: 28 - 06 - 1994

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (28 - 07 - 94) வியாழக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மகன்:- திரு தம்பித்துரை பத்மநாதன் (கொழும்பு)
மகள்:- திருமதி இரஞ்சிதமலர் பாலச்சந்திரன். (ஆசிரியை பெரியபுலம் மகா வித்தியாலயம் யாழ்.)
மருமகன்:- திரு கேதீஸ்வரன் பாலச்சந்திரன் (ஈழநாதம்)
மருமகள்:- திருமதி மகேஸ்வரி பத்மநாதன்
பேரப்பிள்ளைகள்:- செல்வன் சுஜேன்
செல்விகள்:- சாழினி, ஆர்த்தி.

(சி-9989)


# நினைவு கூருகின்றோம்...

## 28-07-1994..

1987-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-தோப்பூர்ப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய.

★ **சுந்தர்** (- தட்சணாமூர்த்தி-கந்தளாய்-திருமலை)

1989-ம் ஆண்டு மன்னாங்கண்டலில் இந்தியப் படையினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய,

**ஜெகன்** (பத்மநாதன் சந்திரகுமார்-ஜெயந்திநகர்-கிளிநொச்சி)

யாழ்-கொட்டடிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990-ம் ஆண்டு திருமலை-கடவானைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**பில்லா** (- உருத்திரமூர்த்தி-திருமலை)

திருமலை-கட்டைபறிச்சான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பாபு** (ஆ. மோகனசுந்தரம்-பதுளை)

1991-ம் ஆண்டு ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியாக ஆ க வெ. நடவடிக்கையின் போது தடை முகாம்மீது -2- வது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**குணா** (நற்குணம் குணசீலன்-முனையூர், தம்பிலுவில்-அம்பாறை)

**அன்புச்செல்வன்** (பூபாலப்பிள்ளை புஸ்பநாதன்-கல்முனை-03-அம்பாறை)

**லெப்.முரளி** (எட்வின் சிறி-மருதங்குளம், மாங்கேணி-மட்டு)

**சந்திரன்** (முருகேசு ராஜேஸ்கண்ணன் - ஜி. பி. ஒழுங்கை, கல்லடி மட்டு)

**கப்டன் சசி** (மாணிக்கராசா சிவகுமார் - விளாங்குளம், கண்டிவீதி-திருமலை)

**லெப்.றோமன்** (குணேந்திரராஜா ஜெயச்சந்திரன் - ரைச்சித்திடல், தம்பலகமம்-திருமலை)

**2 ம் லெப்.துரை** (சிங்காரராஜ் மனோகர் - கள்ளிமேடு, தம்பலகமம்-திருமலை)

**மணாளன்** (பிபதாஸ் விஜயபால் - பாரதிபுரம், மூதூர்-திருமலை)

**ஆதவன்** (சிவலிங்கம் சிவானந்தன்-பூநகர், மூதூர்-திருமலை)

**தமிழ்ச்செல்வன்** (மாசிலாமணி நிரஞ்சன்-திருமலை)

**நெற்போலியன்** (ஞானதாஸ் சுரேஸ்குமார் லிங்கநகர்-திருமலை)

**துணைப்படை வீரரான சுரேஸ்** (செல்வராஜா தனபாலசிங்கம்-கும்புறுப்பிட்டி-திருமலை)

**லெப்.அஜந்தன்** (வேலு ஆனந்தன் - பாண்டியன்குளம்-துணுக்காய்)

**2-ம் லெப்.தாஸ்** (செல்லப்பா குகேந்திரன்-141, உருத்திரபுரம்-கிளிநொச்சி)

**2-ம் லெப்.சிநானு** (கதிரவேலு கருணேஸ்வரன் - முழங்காவில்-மன்னார்)

**சிவதாஸ்** (யுவானிஸ் தெம்சியஸ் - தலைமன்னார் கிராமம்-தலைமன்னார்)

**ஜெயா** (ஜேசுதாஸ் கொனறியூட் - உயிலங்குளம்-மன்னார்)

**சிசில்** (இராமையா பொன்னம்பலம்-இராஜேந்திரன் - பள்ளிக்குடா, பூநகரி-மன்னார்)

**2-ம் லெப்.சுபத்திரா** (புவனேஸ்வரி சுந்தர்-மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி-யாழ்)

**2-ம் லெப்.ஜஸ்மின்** (சத்தியமலர் சின்னத்தம்பி-அல்லாரை வடக்கு, கொடிகாமம்-யாழ்)


## புதுமை - நாடக வரலாறு காணாத புதுமை

நாடக ரசிகப் பெருமக்களுக்கும், நம் இனிய தமிழீழ மக்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்





யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும்,

காரைநகர் விக்காவில் கலைஞர்களும்

இணைந்து மேடையேற்றும்

## மூத்ததம்பி தேவதாசனின்

# "பூதத்தம்பி"

நாடக ரசிக மணிகளே! நம் இனிய தமிழீழ மக்களே!

உங்களுக்கோர் நற்செய்தி.

கடந்த 16-07-94 அன்று மழை காரணமாக நிறுத்தப்பட்ட 'பூதத்தம்பி" யாழ்ப்பாண வரலாற்று இசை நாடகம் மீண்டும் 28-7-94 இன்று இரவு 7.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் மேடைக்கு வருகிறது.

அன்பு ரசிகர்களே உங்களுக்கோர் பணிவான வேண்டுகோள்! 16-7-94 அன்று அன்பளிப்பு சீட்டுக்களை வாங்கியவர்கள் எல்லோரும் அனுமதிக்கப்படுவர். மற்றவர்களும் 2-ம் தவணைத் தேர்வு நடக்கும்போது பார்க்க முடியாமல் தவித்த மாணவ மணிகளுக்கும் வசதியாக இம்முறை அன்பளிப்புக் கட்டணத்தை 10 ரூபாவாகக் குறைத்துள்ளோம். அன்புடையீர்! 'சிறுதுளி பெருவெள்ளம்'. எனவே 10 ரூபாவை மனமுவந்து கொடுத்து ஆனந்தமாய் வந்து நாடகத்தைப் பாருங்கள்.

நன்றி.

யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும்,

காரைநகர் கலைஞர்களும்.

ஆதரவு நல்கும்

நித்தியா பாடசாலைச் சேவை

சிவன் வீதி, உரும்பிராய்.

(சி-9996)

---

அல்லாரை வடக்கு, கொடிகாமம்-யாழ்)

**சூரியகலா** (குமுதினி நடராசா-கரவெட்டி மத்தி-யாழ்)

**அனுஷா** (ஜெசிந்தா குமாரசாமி - களபாவோடை, ஏழாலை தெற்கு-யாழ்)

**அருள்** (சத்தியபாமா கிருஷ்ணதேவன்-நவாலிவடக்கு, மானிப்பாய்-யாழ்)

**நரேஸ்** (ஆரோக்கியநாதன் எட்வேட் குணசூரியன்-சில்லாலை தெற்கு-பண்டத்தரிப்பு)

**சுபராஜ்** (செல்லத்துரை தேவன் - 6-ம் வட்டாரம், வேலணை மேற்கு)

**நாட்டுப்பற்றாளரான, சுரேஸ்** (- - குடியிருப்பு-நாவற்குழி-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக் குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9991)

---

# தேவை

யாழ் நகர் பணிமனையில் பொது எழுதுனர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடம்இருந்து கோரப்படுகின்றன.

எழுதுனர் தகைமை:- குறைந்த தகைமையாகக.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்.

தட்டெழுத்தாளர்:- குறைந்த தகைமையாக க.பொ.த. சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தியுடன் தமிழ் தட்டெழுத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

வயதெல்லை:- 20 தொடக்கம் 25 வரை

வி, இல. 341, மே/பா ஈழநாதம் யாழ்ப்பாணம்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 31-07-1994**

(8953)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

நேரத்தை நாம் சரியாகப் பயன்படுத்தினால் போதிய காலம் நமக்கு எப்போதும் இருக்கும்.

- யொஹன் கேத்தெ.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 28-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை

இனப்பிரச்சினைக்கு தேர்தலின் பின்னாவது அரசியற் தீர்வு ஒன்று காணப்படுவது சாத்தியமா? சமாதான முறையில் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படுமா? என்று எழுப்பப்படும் கேள்விகளுக்கு இன்று இல்லை என்ற பதிலையே அரசியலை அவதானித்து வரும் எவரும் கூற முடியும்.

இரு கைகளும் சேர்ந்து தட்டும் பொழுதே ஓசை வரும் என்பது போல், சமாதானப் பேச்சுக்களுக்கும், அரசியற் தீர்விற்கும் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளும் பட்சத்திலேயே பிரச்சினைக்கான தீர்வை அணுக முடியும். அத்தோடு பிரச்சினையைத் தீர்ப்பதில் ஓரளவிற்கு நியாய பூர்வமான அணுகுமுறையையும் கைக்கொள்ளுதல் வேண்டும்.

ஆனால் இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறிலங்காவில் ஆட்சியில் இருந்து வரும் கட்சியோ அன்றி ஆட்சியைக் கைப்பற்றியே தீருவோம் எனக் கங்கணம் கட்டியுள்ள எதிர்கட்சியினரோ இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வகையில் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டு இருக்கவில்லை.

அதிலும் குறிப்பாக ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனமோ திட்டவட்டமாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பதை வெளிக்காட்டியுள்ளது. வடக்கிலும்-கிழக்கிலுமுள்ள தமிழருக்குத் தற்பொழுது இருப்பதை விட அதிகமான தன்னாட்சி அதிகாரங்கள் எவையும் வழங்கப்படமாட்டாது என அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் இத்தேர்தல்விஞ்ஞாபனமானது தமிழருக்கென தன்னாட்சி அதிகாரங்கள் எவையும் வழங்கப்படமாட்டாது என்பதை மட்டும் உறுதி செய்யவில்லை. தமிழருக்கென ஏற்கனவே சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய முற்படுகின்றது. இது வேடிக்கையானதாகும்.

1987இல் சிறிலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடை

# தமிழ் மக்களின் வாக்கு தமிழ் பிரதிநிதிகளுக்கே

### -தொண்டமான்

(கொழும்பு)

மலையக மக்களுக்கு நன்மை கிடைப்பதாக இருந்தால் அது தமிழ்ப் பிரதிநிதிகளால்தான் கிடைக்கும். பெரும்பான்மை இனப்பிரதிநிதிகளால் பெறப் போவது ஒன்றுமில்லை. எனவே மலையக மக்கள் இதனை மனதில் கொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். தமிழ்ப் பிரதிநிதிகளின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும். அமைச்சருமான எஸ்.தொண்டமான் கூறியுள்ளார்.

அப்புத்தளை பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பலர் இன்று எம்மிடம் வாக்குகள் கேட்டு வருகின்றனர். இவர்கள் கடந்த காலங்களில் எமது மக்களுக்கு செய்த சேவைகள் என்ன என்பது பற்றி மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

எதிர்க்கட்சியில் இருக்கும் பெரும்பான்மை இனப் பிரதிநிதிகள் மட்டுமல்ல ஆளும் கட்சியில் இருப்பவர்களும் கூட எமது மக்களுக்கு எதிராகவே செயற்பட்டுள்ளனர். அவ்வாறானவர்களை நாம் தேர்தல் காலத்தில் மட்டும் ஆதரிக்க வேண்டும் என்ற தேவை இல்லை. இத்தகையோர் வெற்றிபெற்ற பின்னர் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் சிறு அளவையேனும் எமது மக்களுக்காக செலவிடுவதாக இல்லை. இந்த நிலையில் மலையக தமிழ் மக்கள் அபிவிருத்திக்காக தமிழ் பிரதிநிதிகளிலேயே தங்கிநிற்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

## தொலைக்காட்சியில் வாதிட சந்திரிகா முன்வருவாரா?

### -தினேஷ் குணவர்த்தனா சவால்

(கொழும்பு)

தன்னுடன் தொலைக் காட்சியில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்க முன்வருவாரா என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தனா சவால் விடுத்துள்ளார்.

டி.என்.எல் தொலைக் காட்சி மூலம் இந்த விவாதம் உடனுக்குடன் ஒளிபரப்பாகும் எனவும், இந்த விவாதத்தில் பங்கேற்க இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனரெனவும், டெல்சான் நிறுவன உரிமையாளர் சான் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

எனினும் இவ்விவாதம் எப்போது நடத்தப்படும் என்பதையோ எங்கு நடத்தப்படுவது என்பதையோ அவர் விபரிக்கவில்லை.

## உள்ளக விளையாட்டு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உள்ளக விளையாட்டுகள் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் ஆசிரியர்களிடமிருந்தும்மாணவர்களிடமிருந்தும் கோரப்பட்டுள்ளன. சதுரங்கம், மற்றும் பட்மின்டன் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

## நான் எப்போதுமே ஐ.தே.கவை நேசிக்கிறேன்

### - திருமதி ஹேமா தெரிவிப்பு

(கொழும்பு)

நான் எப்போதும் ஐ.தே.கவை நேசிக்கிறேன் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா கூறியுள்ளார். கொழும்பிலிருந்து வெளிவரும் ‘சண்டே லீடர்’,பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், தற்போது தான் மௌனமாக இருக்கின்ற போதும் அரசியலில் எவருக்கும் எதிராக ஈடுபடவில்லை எனவும், கணவரால் ஆரம்பிக்கப்பட்ட சுசரித்த இயக்கத்தினூடு நாடு முழுவதும் வாழும் ஏழை,எளியமக்களுக்குசேவையாற்ற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

## தடுப்பூசி இட நடவடிக்கை

மாடுவளர்ப்போரின் நன்மைகருதி மாடுகளுக்கு ஏற்படும் தொண்டையடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசியை இலவசமாக போடும் நடவடிக்கையை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இயற்கையாகவே மாடுகளில் வழ்ந்து கொண்டிருக்கின்ற நோய்க்கிருமிகள் மழை ஆரம்பித்தவுடன் மாடுகளை தாக்கத் தொடங்குகின்றன. இதனால் மாடுகள் ஓரிருநாட்களில் இறந்து விடக்கூடிய அபாயநிலை ஏற்படுகின்றன.

வன்னிப் பிரதேசங்களில் அனேகமாக காணப்படும் இந்நோய் அங்கிருந்து மாடுகள் இறைச்சிக்காக கொண்டுவரப்படுவதால் யாழ் குடாநாட்டிலும் பரவுவதற்கான சூழ்நிலைகாணப்படுகின்றன.

வேகமாகப் பரவக்கூடிய இத்தொற்றுநோய்க்கு அறிகுறியாக தொண்டை வீங்குதல் காய்ச்சல், உணவு உட்கொள்ள முடியாமல் படுத்திருத்தல் என்பன காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நோய் தொடங்கி 24-48 மணித்தியாலத்திற்குள் மாடுகள் இறந்துவிடும் என்பதுடன் நோய் அறிகுறிகள் தென்பட்ட பின்பு எந்தவித சிகிச்சையும் பலனளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருக்குறள் போட்டி

தமிழீழ திருவள்ளுவர் மன்றம் ஆண்டு தோறும் நடத்தி வரும் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான திருக்

## ஆசிய புதிய சின்னமாக இந்தியா, சீனா உருவாகும்

(புதுடில்லி)

21ம் நூற்றாண்டில் இந்தியாவும், சீனாவும் ஆசியாவில் புதிய அடையாளச் சின்னம் ஒன்றை ஏற்படுத்த முடியுமென்று மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன்சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய சீன உறவுகள் ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் ான கருத்தரங்கமொன்று புதுடில்லியில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் சர்வதேச ரீதியில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியாவும் சீனாவும் நெருங்கி ஒத்துழைக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

## 14000 ருவாண்டா அகதிகள் வாந்திபேதிக்குப் பலி

(கிகாலி)

கிழக்கு சயர் நாட்டு எல்லைப்பகுதியில் ருவாண்டா அகதிகளிடையே பரவிவரும் வாந்திபேதி நோயை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பகுதியில் பணியாற்றும் தொண்டர் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

ஏற்கனவே 14 ஆயிரம் அகதிகள் வாந்தி பேதியினால் பலியாகியுள்ளனர். மேலும் இரண்டாயிரம் பேர் எதிர்வரும் சில தினங்களினுள் பலியாவர் என எதிர்பார்க்கப்படுகிறது. மரணமானவர்கள் தொகை அதிகரிப்பதால் இவர்களது சடலங்கள் ஒரே புதைகுழியில் போடப்பட்டு மூடப்படுகின்றன. இதே வேளை இந்த வாந்திபேதி நோய் சயர் நாட்டு மக்களிடையே பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரிக்கப்படுகிறது.

## நைஜீரியஇராணுவ ஆட்சிக்கு அமெரிக்காவில் கண்டனம்

(நைரோபி)

நைஜீரியாவில் ஆட்சி புரியும் இராணுவ அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அமெரிக்க அரசின் மக்கள் பிரதிநிதிகள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நைஜீரியாவில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்த கிளிண்டன் நிர்வாகம் தகுந்த முறையில் ஊக்கமளிக்க வேண்டும் எனவும் இத்தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. நைஜீரியாவில் கடந்த ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது எதிர்க்கட்சி வேட்பாளர் நபியோலா வெற்றி பெறுவார் என்ற நிலையில் இராணுவ அரசாங்கம் அத்தேர்தலை ரத்து செய்ததும், நபியோலா தம்மைத்தாமே ஜனாதிபதி பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து அவர் மீதுஇராஜ துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

## சிட்டகாங்நகரில் மோதல் மூவர் பலி; பலர் படுகாயம்

(டாக்கா)

பங்களாதேசின் துறைமுக நகரான சிட்டகாங்கில், சமயவாதக்கட்சியான ஜமாயித்தே இஸ்லாமியின் மாணவர் அமைப்புக்கும், அனைத்துக் கட்சி மாணவர் அமைப்புக்கும் இடையே நடைபெற்ற மோசமான மோதலொன்றில் மூவர் உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இத்தாக்குதலில்மேலும் 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இஸ்லாமுக்கு எதிரானவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று ஜமாய்த்தே இஸ்லாமி அமைப்பும், அரசியலில் சமய சார்பற்ற சக்திகள் பலப்பட வேண்டும் என்று அனைத்து கட்சி மாணவர் அமைப்பும் வலியுறுத்தி வருவதே மோதலுக்கு அடிப்படை எனக் கூறப்படுகிறது

## மக்களவைக்கான தேர்தல்

வேடிக்கையானதாகும்.

1987இல் சிறிலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடானது இலங்கையில் மாகாணசபைகளை உருவாக்க உதவியதாயினும் அது இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும், தமிழருக்கு விசேட அதிகாரங்களை வழங்கும் ஒரு விசேட அமைப்பாகவும் இருக்கவில்லை. அது இலங்கை பூராவும் மிகச் சிறியளவினதான அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும் ஒரு அமைப்பாகவே உருவாக்கப்பட்டது. தமிழருக்கென அது விசேடமாக எதையும் கொண்டு வரவில்லை.

அத்தோடு இவ் உடன்பாட்டையும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையையும் தமிழ்மக்கள் ஏற்கனவே நிராகரித்துவிட்டனர். இந்நிலையில் ஐ.தே.க. தமிழருக்கென எதையும் வழங்கவுமில்லை தமிழ் மக்கள் எவற்றையும் பெற்றுக் கொள்ளவும் இல்லை என்பதே யதார்த்த நிலையாகும்.

இந்நிலையில் மேலதிகமாக எதையும் தமிழருக்கு வழங்கப் போவதில்லை என்ற ஐ.தே.கவின் அறிவிப்பானது, இனப்பிரச்சினையில் இராணுவத்தீர்வில் இருந்து மாறப்போவதில்லை என்பதன் வெளிப்படையான அறிவிப்பாகும். ஆகையினால் விடுதலைப்புலிகள் அமைப்பு இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு பற்றியோ அன்றி அரசியற்தீர்வு பற்றி பேசுவதாலோ, அன்றி முயற்சிப்பதாலோ நன்மை ஏதும் விளையும் என எதிர்பார்க்க முடியாது.

இதேவேளை இலங்கையில் பற்றி எரியும் இப்பிரச்சினை பற்றி பிரதான அரசியற்கட்சிகள் அக்கறை காட்டவில்லை என்பதை நாம் மட்டும் கூறவில்லை- அரசியற் கட்சிகள் அக்கறை காட்டத் தவறிவிட்டதாகவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் மட்டுமே அவை குறியாக இருப்பதாகவும் சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளே குற்றம் சாட்டியுள்ளன. இது வரை சிங்களப் பேரினவாதத்தின் குரலாக ஒலித்துவந்த 'ஐலன்ட்' போன்ற இப்பத்திரிகைகள் உணர்ந்து கொண்ட அளவிற்குக் கூட அரசியல் வாதிகளும், அரசியற்கட்சிகளும் இது குறித்து உணரத் தவறிவிட்டனர். அல்லது உணர்ந்ததை அவை மறைத்துவிட்டன. அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் மட்டுமே குறியாகவுள்ளனர்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு, சமாதான ரீதியான தீர்வு என்பவை எல்லாம் பேச்சளவில் மட்டுமானதே ஆகும். இரத்த ஆறு ஓடினாலும் சிங்கள அரசியல்வாதிகள் தமது நலன் பேணும் சந்தர்ப்பவாத அரசியலே நடத்த முற்பட்டு நிற்பதினால் தமிழ் மக்களுக்குப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறுதமிழ் மக்கள் போராடத் தவறினால் அது தற்கொலைக்கு ஒப்பானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

லீடர், பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் குறிப்பி... யாற்ற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

## வாழைச்சேனை ஆலயத்தில் படையினர் பெரும் தேடுதல்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை கைலாய பிள்ளையார் ஆலயத்தில் இரவு நேரம் பூசை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அங்கு திடீரென வந்திறங்கிய சிறிலங்காப் படையினர் தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளனர்.

பெருமளவு பக்தர்கள் கூடியிருந்த வேளையில் வாகனங்களில் வந்திறங்கிய படையினர் கோவிலுக்குள் புகுந்தும் தேடுதலை மேற்கொண்டுள்ளனர் ஆலய குருக்களின் அறை உட்பட முழு ஆலயப் பகுதியும் படையினரின் தேடுதலுக்கு இலக்காகியது குறிப்பிடத்தக்கது.

## நிதி ஒதுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அகதிமுகாம்களில் உள்ள குடிசைகள், மலசல கூடங்களை திருத்தியமைப்பதற்கு மூன்று மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தி)

## துணைவேந்தர் துரைராசா 5 தங்கப்பதக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் இவ்வருடத்திற்கான பட்டமளிப்பு விழாவின் போது மறைந்த முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் நினைவாக ஐந்து வகையான தங்கப்பதக்க விருது புதிதாக இம்முறை வழங்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் திரு.க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்

பீடவாரியாக நான்கு பதக்கங்களும், நான்கு பீடங்களிலும் அதிசிறந்த 'சகலதுறை' வீரர்களுக்குமாக ஒரு பதக்கமும் மொத்தம் ஐந்து தங்கப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது. மேலும் இந் நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளவராக இருக்க வேண்டும்.

★ இரண்டாவது உயர்வகுப்பில் சித்தியடைந்திருத்தல் (UPPER 2 nd)

★ பல்கலைக்கழக அணித் தலைவர்கள் பதவி

★ பல்கலைக்கழக விளையாட்டுகளில் "கலர்ஸ்" பெற்றிருத்தல் வேண்டும்.

★ பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியிருத்தல்

★ தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுதல்

★ சர்வதேச மட்டத்தில் பங்குபற்றுதல்

★ தேசிய மற்றும் சர்வதேச கூட்டங்களில் பங்குபற்றியிருத்தல்

★ கழகங்கள் மற்றும் மன்றங்களின் தலைமைத்துவ மற்றும் பதவிகளை வகித்தல்

★ கலை கலாசாரம் நாடகம் போன்றவற்றில் பங்குபற்றியிருத்தல்.

போன்ற நிபந்தனை ஆகக் குறைந்த தேவைகளாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (05)

---

...வரும் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான திருக்குறள் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படவுள்ளது.

மனனம், கட்டுரை, பொது அறிவு ஆகிய போட்டிகள் உரும்பராய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, குடத்தனை அ.த.க.பாடசாலை, உடுப்பிட்டி அ மி பாடசாலை ஆகிய தேர்வு நிலையங்களில் எழுத்துத் தேர்வுகள் சனிக்கிழமையன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

பேச்சுப் போட்டி, மனனப் போட்டி என்பவை ஞாயிறு காலையில் ஒன்பது மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## யோக விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை யோகக் கலையகத்தின் 'யோகவிழா' சிவன்கோவில்பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானக்குமார் தலைமையில் நடைபெற்றது. (25)

## அலங்கார உற்சவம்

(தொல்புரம்)

சித்தன்கேணி ஸ்ரீஞானவைரவர்ஆலய வருடாந்த அலங்காரஉற்சவம் எதிர் வரும் 31 ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்துபத்து தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது. தினசரி பூசை ஆராதனை வழிபாட்டினைத் தொடர்ந்து மாலை வேளை தெய்வீகத்தொடர் சொற்பொழிவுகள் சைவப்புலவர் எம் எஸ் ஸ்ரீதயாளன் அவர்களால் நிகழ்த்தப்படும். (41)

---

## மக்களவைக்கான தேர்தல் முன்கூட்டியே நடக்கலாம் -பி.வி. நரசிம்மராவ்

(புதுடில்லி)

1996 ம் ஆண்டில் நடைபெற வேண்டிய மக்களவைப் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் முற்கூட்டியே நடத்தப்படலாம் என்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில். மே, ஜூன் மாதங்கள் மக்களுக்கு சௌகரியமாக இல்லை என்றும் பாராளுமன்ற மக்களவையில் தமது கட்சிக்கு பெரும்பான்மை வலு இருக்கின்ற போதும் கூட பொதுக் கருத்தை எட்டுவதற்கான முயற்சியில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அத்துடன் தேர்தல் சீர்திருத்தங்களை வலுவாக ஆதரித்துப் பேசியதுடன் தேர்தல்களில் பணபலம், ஆட்பலம் என்பன பயன் படுத்தப் படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## குண்டுகள் வெடித்தன

(லண்டன்)

லண்டனில் இரு முக்கிய இடங்களில் வெவ்வேறு நேரங்களில்நேற்று இருபாரியகுண்டு வெடிப்புகள் ஏற்பட்டன.

வடக்கு லண்டனில் இருக்கும் இஸ்ரேலிய தூதுவரகத்திற்குசமீபமாககாரில் வைக்கப்பட்டிருந்த ஒரு குண்டு வெடித்ததில் தூதுவரகத்திற்கும் சேதம் ஏற்பட்டதுடன் அங்கிருந்தவர்களில் தூதுவரக அதிகாரிகள் உட்பட சிலர் காயமடைந்துள்ளனர்.

அதைத்தொடர்ந்து இரண்டாவது குண்டும் நேற்று அதிகாலையில் வெடித்தது.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.07.28 வியாழன் இரவு

08.01- சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10- உரை-நாடகக் கல்வி
08.20- உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் நவத்தார் குடும்பம்- குறுநாடகம்
08.30- செய்திகள்
08.40- ஏட்டிலிருந்து- தேர்ந்த கட்டுரை என்ற நூலிலிருந்து "செக் இனத்தவர்களும் சிலவாக்கிய இனத்தவர்களும் தாங்கள் பிரிந்து செல்லும் நாளை எதிர்பார்த்திருக்கின்றார்கள்" எனும் கட்டுரையின் சில பகுதிகள்.
08.50- மலரும் மொட்டுக்கள்.

### 1994.07.29 வெள்ளி காலை

07.02- மாவீர வணக்கம்
07.15- விடுதலை கானங்கள்
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# பொ. ஐ. முன்னணிவெற்றிபெற்றதும் கொழும்பு விமான நிலையம் மூடப்படும்

## ஊழல் அமைச்சர்கள் தப்பியோடுவதை தடுக்க திட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் இது குறித்து முடிவு அறிவிக்கப்பட்டதுமே கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை தற்காலிகமாக மூடிவிட வேண்டும் என இம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

ஆளும் கட்சியின் ஊழல் அரசியல்வாதிகள் தோல்வியின் பின் நாட்டைவிட்டு தப்பியோடாது இருக்கவே இம் முயற்சியை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி கூறுகிறது.

அமைச்சர் சிறிசேன கூரே நாட்டை விட்டு தற்போது வெளியேறி விட்டதாக எதிரணியினர் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்களின் இப் புதிய அறிவிப்பும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எம்நலன் பாதிக்கப்பட்டால் நாம் வெளியேறிவிடுவோம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணியில் எம் நலன் பாதிக்கப்படும் வேளை தோன்றினால் நாம் வெளியேறி விடுவோம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கூறியுள்ளார்.

நாம் எமது தனித்துவத்தை விட்டுக் கொடுக்காது முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தவே பொ.ஜ.ஐ. முன்னணியுடன் இணைந்துள்ளோம்- தொண்டமானைப் போல் எனது தனித்துவமான தேர்தல் சின்னத்தை இழந்து யானை சின்னத்தில் நாம் போட்டியிடவில்லை' வடக்கு, கிழக்கில் எமது தனித்துவம் பேணவே எமது சின்னத்திலேயே போட்டியிடுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்-

# ஐக்கியஇலங்கையில்நடக்கும் இறுதித் தேர்தல் இதுவே

## மக்கள் ஐ. மு. உறுப்பினர் தெரிவிப்பு

இன்று எமது நாட்டின் பல பகுதிகள் எமக்குச் சொந்தமில்லை, எதிர்வரும் பொதுத் தேர்தல் ஐக்கிய இலங்கையில் நடைபெறும் இறுதித் தேர்தலாக இருக்கலாம் என மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் உரையாற்றிய நளின் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

பொரளையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையில், வடக்கு-கிழக்குக்கு நாம் செல்ல முடியாது, அதேபோன்று மலையகத்தில் தொண்டமானின் செல்வாக்கு மேலோங்கியுள்ளது. 1815-ஆம் ஆண்டு எமது உரிமை கொண்டாடப்பட்ட மலைநாட்டுப் பகுதி இன்று தொண்டமானின் கையில் எனவும் அங்கு அவர் தெரிவித்தார்.

# தார் வராமையினால் திருத்தவேலையில் தடை

உரிய காலத்தில் கொழும்பில் இருந்து தார் வந்து சேராமையினால் யாழ் மாநகரசபையினால் புனரமைப்புச் செய்யப்படுகின்ற இரண்டாம் கட்ட வீதிகள் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

ஏற்கனவே யாழ் மாநகரசபைக்கென கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 300 பரல் தாரும் முதலாம் கட்ட வீதி புனரமைப்பு வேலைக்கிட்டங்களு[illegible] வரப்பட்டாலே அடுத்த இரண்டாம் கட்ட வீதிகள் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குப் பின்னர் மழைகாலம் ஆரம்பிக்குமாகையினால் அதற்கு முன்னர் வீதிகள் புனரமைப்புப்பணிகள் அனைத்தும் முடிவடையவேண்டும் எனவும் இல்லையேல் அதற்குப் பின்னர் புனரமைப்புச் செய்ய

## ரெலோ உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலைப் பல்கலைக் கழகத்துக் கருகில் பச்சை நிற ஆடையணிந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இப்பிரதேசத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ரெலோ உறுப்பினர் ஒருவரும் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## லெப். கேணல் சராவிற்கு நேற்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

லெப், கேணல் சராவின் மூன்றாமாண்டு நினைவாக, திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு நேற்று கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஈகச் சுடரை நிதர்சனம் பொறுப்பாளர் ஜவான் ஏற்றி வைக்க மலர் மாலையை நல்லூர் வட்டப் பொறுப்பாளர் வேந்தன் சூட்டினார்.

## முகவரியற்ற அனுமதி அட்டை

அடுத்த மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உ [ த) பரீட்சைக்கான யாழ். மாவட்ட பரீட்சார்த்திகள் 32 பேரின் அனுமதி அட்டைகள் தபாலகத்தினால் திருப்பியனுப்பப்பட்டுள்ளது.

இவை தற்சமயம் யாழ் வலயம் ஒன்று கல்வித்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன: முகவரிகள் எதுவுமற்ற இவ் அனுமதி அட்டைகளை உரியவர்கள் யாழ். கல்வி வலயம் - 1 இல் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

# பாதிப்புற்ற மக்களிடம் வாக்கு கேட்க வரவில்லை

## இலங்கை முற்போக்கு முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிப்புற்று நிற்கும் மக்கள் முன் வாக்கு கேட்க நாம் வரவில்லை, இதனாலேயே நாம் வடக்கு, கிழக்கு யுத்தப் பிரதேசங்களில் நாம் போட்டியிடவில்லை. அப்பகுதியில் வாழும் எமது சகோதர, சகோதரிகள் வாழும் உரிமையை முற்றாக இழந்து நிற்பதை உலகிற்கு காட்டவும் நாம் அங்கு போட்டியிடவில்லை என இலங்கை முற்போக்கு முன்னணியின் சுப்பையா இரத்தினசபாபதி கூறியுள்ளார்.

தேர்தல் பிரசாரமொன்றில் அவர் தொலைக்காட்சியில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவ்வேளை அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கில் அப்பாவி மக்களை லட்சக் கணக்கான குண்டுகளை போட்டு கொன்றொழிக்கிறார்கள். அதே வேளை சமாதானம் எனக் கூறிக்கொண்டு அங்கு தேர்தல் நடத்தவும், வாக்குகளை கொள்ளையடிக்கும் வெட்கமான நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.

போர்த் தீயிற்கு எண்ணெய் வார்த்துக் கொண்டு சமாதானத்தை பற்றிக் கதைப்பதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது..

இவ் யுத்தம் அகதிகளை உருவாக்கும் யுத்தம், மக்களைக் கொன்றொழிக்கும் யுத்தம், வடக்கு - கிழக்கு, மலையகம் மட்டுமல்ல, இலங்கை முழுவதையுமே சீர்குலைத்திருக்கிறது. உங்களுக்கும், எங்களுக்கும் கௌரவமான உறுதியான சமாதானமே தேவை. மக்களுக்கு

## தற்கொலை

(கொழும்பு)

வடபகுதி வாலிபர் ஒருவர் பம்பலப்பிட்டியில் உள்ள வீடொன்றின் குளியல் அறையில் வைத்து பிளேட்டினால் கழுத்தை வெட்டித் தற்கொலை செய்த சம்பவம்

# நாட்டை துண்டாட எடுக்கும்முயற்சிகள் விரைவில்வெளிச்சத்துக்குவந்துவிடும்

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

(பண்டாரவளை)

''நாட்டைத் துண்டாடுவதற்கு எத்தகைய மர்மமான நடவடிக்கைகள் இடம் பெற்றாலும் விரைவில் அதெல்லாம் வெளிச்சத்துக்கு வந்துவிடும். அப்படியோர் நிலைமை உருவாகிவிட இடமளிக்கவே கூடாது'' என்று தியத்தலாவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், எக்காரணம் கொண்டும் எமது நாடு பிளவுபடவோ, சிதறிடவோ நாம் இடமளிக்கக் கூடாது. இதற்கு நம்மிடையே சகோதரத்துவமும் நாமெல்லோரும் ஒரே குடும்பம் என்ற உணர்வும் ஏற்பட வேண்டும். நம்மிடையே பிளவு ஏற்பட்டால் நாட்டிலும் பிளவு ஏற்பட்டுவிடும்.

இவ் வருடம் ஒரு சவால் நிறைந்த வருடமாக அமைந்திருக்கிறது. வடக்கு-கிழக்குப் பிரச்சினை உட்பட இது போன்ற பல பிரச்சினைகள் எமக்கெல்லாம் ஒரு சவாலாக அமைந்திருக்கின்றன.

பிளவு மனப்பான்மையும் பிரச்சினைகளும் தொடரும் போது நாட்டில் உண்மையான அமைதி நிலைக்காது. இதனால் குரோதமும் யுத்தங்களும் மூண்டவண்ணமே இருக்கும். எனவே இத்தகைய நிலையிலிருந்து மக்கள் விடுபட்டு தேசிய மனப்பாங்கில் அனைவரும் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவோம் என்றார்.

# மட்டு.வாவிப் பகுதிகளில் அடிக்கடி சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு வாவிக்கு அருகிலுள்ள காடும் வயலும் சார்ந்த பகுதிகளை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கைகளை அடிக்கடி நடத்தி வருகின்றனர்.

தேர்தல் பாதுகாப்பிற்காகவே இவ்வாறு தேடுதல்களை இராணுவத்தினர் நடத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது காட்டுப் பகுதிகளிலிருந்து புலிகள் வாவியைக் கடந்து இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துள் ஊடுருவுவதாகவும் இதனையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இதே வேளை வாழைச்சேனைப் பகுதியை கடந்த வாரம் சுற்றிவளைத்த படையினர் 7 பொதுமக்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

# கார்களைத் துரத்தித்துரத்தி உலங்குவானூர்தி சூடு

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதி வீதியால் சென்ற வாகனம் மீது உலங்கு வானூர்தி ஒன்று துரத்தித் துரத்திச்சுட்டது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 5. 30 மணியளவில் நிகழ்ந்தது அவ் வீதியால் வந்துகொண்டிருந்த இரண்டு கார்களை நோக்கி உலங்குவானூர்தி பலமாகச்சுட்டது.

இதனால் காரில் வந்த பயணிகள் பெரும் பதற்றமடைந்து மறைவிடங்களை நாடி ஓடினர் எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (யோ)

# தடாவில் கைதானோர் குற்றமற்றவரென விடுவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்தவர் எனக் கூறப்படும் கீரனை நியமன நீதிமன்ற நீதிபதி ஒருவர், இவர் மீது போதிய குற்றச்சாட்டுகள் இல்லை என விடுவித்துள்ளார். இவர் தடா சட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு பெப்ரவரியில் கைதானார்.

சிவத்தம்பி என்றமற்றுமோர் தடாகைதி ஒருவரும் பட்டணம் காத்தான் துப்பாக்கி சூடு சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டிருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டபோதிலும் அவரை மீண்டும் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கீரன் மீதான குற்றச்சாட்டு அரசதரப்பில் நிரூபிக்கப்படவில்லை. இவர் தமிழ்நாட்டில் பயங்கரவாத செயல் எதனுடனும் சம்பந்தப்பட்டதாக

## ரகசியபொலிசாரிடம் ஒப்படைப்பு

சிலாபத்தில் கடந்தவாரம் நடைபெற்ற அரசியற் கொலை, வீடுகள் தீக்கிரை தொடர்பான விசாரணைகள் இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இங்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன், வேறு பல ஆதரவாளர்களும் தாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்படவிருந்த 'சர்வதேச கூட்டுறவாளர் தின விழா தவிர்க்க முடியாத காரணத்தை யொட்டி பிற்போடப்பட்டுள்ளதாக மேற்படி சபை அறிவித்துள்ளது. இவ்விழா ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## ஆங்கில தினப் போட்டி

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் தலைமையில் நேற்று ஆரம்பமாகின. ஆண்டு 8 முதல் ஆண்டு 12 வரையிலான மாணவர்களுக்குரிய போட்டிகள் இன்று காலை 9.00 மணியளவில் வட்டு.

முதலாம் கட்ட வீதி புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கே போதுமாகவுள்ளன.

அடுத்து ஒரு தொகுதி தார் கொழும்பில் இருந்து எடுத்து

வடையவேண்டும் எனவும் இல்லையேல் அதற்குப் பின்னர் புனரமைப்புச் செய்ய முடியாது என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா)

# புனர்வாழ்வு எனும்பெயரில் ஐ.தே.க. வினருக்கு பணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தமது தோல்வியை முன்னரே உணர்ந்து தமது சகபாடிகளுக்கு 'புனர்வாழ்வு' என்ற பெயரில் பல லட்சக்கணக்கான ரூபாக்களை வழங்கி வருவதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் குறுக்கு வழியில் பெறப்பட்ட பெருமளவு பணம் இம்மாதம் 19-ம் திகதியில் இருந்து ஐ.தே.க. உறுப்பினருக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## வைகை வெளியீட்டுவிழா

வை. க. தவமணிதாசனின் வைகை கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.


யாழ். ஸ்ரீதரில்

இன்றும், நாளையும் மட்டும்!

மாலை: 4.00 மணிக்கு

உயிராயுதம்

மாலை: 6.00 மணிக்கு

JURASSIC PARK

இவ்விரு படங்களுடனும்

போர் முரசு

படமும் காண்பிக்கப்படும்

(சி-9987)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


கழுத்தை வெட்டித் தற்கொலை செய்த சம்பவம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர் ஆர். ரவிசங்கர் (வயது 32) என தெரியவந்துள்ளது.

இந்த வாலிபர் பம்பலப்பிட்டி கொத்தலாவலை கார்டனில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்து தங்கியிருந்த போதே தற்கொலை செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிரணிக்கு

ரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார் இனப் பிரச்சினை தீர்வு குறித்து தமது கட்சி பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி நல்ல பெறுபேறுகளை பெறும் எனவும் இதற்கு தமிழ்மக்கள்வாக்களிக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஈ. பி. ஆர். எல். எப் இன் தேசியபட்டியலில்எனதுபெயர் இடம்பெற்றுள்ளது. தேர்தலின் பின் காணப்படும் நிலைமையை பொறுத்தே எனது எதிர்கால அரசியல் இருக்கும் எனது அஞ்ஞாதவாசத்திற்கு விடுதலைப்புலிகள் - பிரேமதாசா அரசு கூட்டே காரணம் மேலும் வன்முறைகள் பரவாமல் இருப்பதற்காகவே நான் நாட்டை விட்டு வெளியேறினேன் என்றும் வரதராஜப்பெருமாள் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்-

## யாழ்.

டிலுள்ள பகுதியில் வசிக்கும் வாக்காளர்கள் தம்முடைய வாக்குகளைப் பதிவு செய்வதற்கு என்னால் உதவ முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

மான உறுதியான சமாதானமே தேவை. மக்களுக்கு சமத்துவம் தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

## வெள்ளி விழா

தோலகட்டி ஆச்சிரமத்தின் செபமாலைத் தாசர் சபை துறவியரின் ஆன்மீக வழிபாட்டு தலமான யாழ்ப்பாண அருள் ஆச்சிரமமும் நற்கருணை வழிபாடுகளும் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுபெறுவதை முன்னிட்டு நாளை பிற்பகல் 4.30 மணிக்கு விசேட நற்கருணை வழிபாடும், ஆராதனைகளும் நடத்தப்படவுள்ளது.

## குற்ற

இவ் வீதியில் கனடிய தூதுவராலயம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இத் தலைமையகத்திற்கு அண்மையில் இயங்கிவரும் பிரபல பாடசாலை ஒன்றின் நிர்வாகத்தினரும் இதனை உடனடியாக மாற்றுமாறு அரசிடம் பகிரங்க கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது

## வடக்கு

கப்பட்டபோது 60.3 சதவீதமானோர் அரசு இன்னமும் நன்றாக செயற்பட்டிருக்க வேண்டும் எனவும், 19.1 சதவீதமானோர் அரசின் நடவடிக்கையில் திருப்தியும் கொண்டுள்ளனர்.

எப்படிப்பட்டவர் நாட்டின் தலைவராக வரவேண்டும் என்று கேட்கப்பட்ட போது 33 சதவீதமானோர் முதல் தெரிவாக புத்திக்கூர்மையான ஒருவரையே விரும்புவதாக குறிப்பிட்டுள்ளனர். இக் கருத்துக் கணிப்புக்களை சண்டே ரைம்ஸ் பத்திரிகை அமெரிக்க கருத்துவாக்கெடுப்பு நிலையம் ஒன்றின் துணையுடன் நடாத்தியுள்ளது.

னார்.

## வலிப்பு

தொடர்பு கொள்வதற்கும், நரம்பு மண்டலத்திலுள்ள கலங்களுடன் தொடர்பு கொள்ளவும் பயன்படுத்தும் இரசாயன மின்னோட்ட சமிக்கைகள் பாதிப்புறும் போது உண்டாகும் வலிப்புக்கு இம்மருந்து புதிய நம்பிக்கை அளிக்கலாம் என அச்சஞ்சிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வல்வை

ப்பட்டன.

இதேவேளை காலை 5 40 மணியளவில் வந்த உலங்கு வானூர்தியொன்று அப்பகுதியை வட்டமிட்டு கலிபர் தாக்குதலை நடத்தியதுடன் மீனவரைநோக்கியும் தாக்குதல் நடத்தியது.

## 3 தமிழ்ப்

செய்துகொண்டார்.

இதேவேளை கடந்த 11-ம் திகதி இரவு 8 மணியளவில் பழுகாமம் அதிரடிப்படை முகாமைச் சேர்ந்தவர்கள் பழுகாமம் வாய்க்காலடி என்னும் இடத்திற்குச் சென்று இரு பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளனர். பின்னர் அவ்விருவரையும் ஜீப்பில்ஏற்றிச் சென்று களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையிலும் மட்டக்களப்பு வைத்தியசாலையிலும் விட்டுள்ளனர்.

## பொ. ஐ. மு.

நாள் கொலை அச்சுறுத்தல் பற்றி உங்களுக்கு முறையிட்டிருந்தார். அவருக்கு பாதுகாப்பு அளிக்கப்படாததால் அவர் கொலை செய்யப்பட்டார் இந்த விடயத்தையும் கவனத்தில் கொள்ளுமாறு தனது கடிதத்தில் ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

வில்லை. இவர் தமிழ்நாட்டில் பயங்கரவாத செயல் எதனுடனும் சம்பந்தப்பட்டதாக உறுதிசெய்யப்படவில்லை என நீதிபதி குறிப்பிட்டார்.

லான மாணவர்களுக்குரிய போட்டிகள் இன்று காலை 9.00 மணியளவில் வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறும். (41)


மாமனிதர் விருதுபெற்ற கலைஞானி

அவர்கள் நடாத்தும்

மாபெரும் தொல்பொருள்

கண்காட்சி

இடம்: யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி

காலம் 1994-07-28, 29, 30-ந் திகதிகள்

நேரம்: காலை 8-30 முதல் மாலை 5-30வரை

கலைஞானியின் சுயமுயற்சியினால் சேகரிக்கப்பட்ட புராதன கலை, பண்பாடு, மருத்துவம், மதம், இனம் தொடர்பான விபரங்கள், தமிழீழத்தின் இன்னும் பல பொருட்கள் இடம்பெறும்.

''மொழி, கலை, கலாச்சாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன. ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன. ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாக அமைகின்றன.''

தேசியத்தலைவர்

திரு. வே. பிரபாகரன்

நுழைவுச் சீட்டு:- பெரியோர் 10/-

சிறுவர் 5/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. N. புகன்சிறீந்திரன்

B.A (Hons)

(கண்காட்சிக்குழுச் செயலாளர்)

விளம்பர அன்பளிப்பு:- சிவா பல்பொருள் வாணிபம்

(Siva Trading Co.)

22, டச்சு வீதி,

சாவகச்சேரி.

(8955)